1973 நவம்பர் 23]

Production of Jasmine oil.

* 344 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to start a factory to produce Jasmine oil in the Public and the Private Sectors; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : அதற்கு எக்ஸ்போர்ட் மார்க்கெட் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அதற்கு ஒரு ஆலை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிற்சாலை ஒன்று அமைக்கலாமா என்ற யோசனை பரிசிலிக்கப்பட்டது. ஆனால் அது நல்ல முறையில் நடக்குமா என்று சந்தேகம் ஏற்பட்டதன் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது.

Commutation of sentences.

* 345 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Industries be please to state—

(a) whether remission was granted to any of the prisoners undergoing life imprisonment during this year (1972–73); and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) 1972-73-ஆம் ஆண்டு, 20 நபர்களுடைய ஆயுள் தண்டனையை குறிப்பிட்ட வருட கடுங்காவல் தண்டனையாக அரசு மாற்றி உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்னும் மதுரை, திருச்சி, கோவை போன்ற சிறைகளில் 10 ஆண்டுகளுக்கு அதிகமாகச் சிறை தண்டனை அனுபவிக்கிறவர்கள் 'லைஃப் இம்ப்ரிஸன்மெண்டு பிரிஸனர்ஸ்' இருக்கிறார்களா? அவர்களுடைய விவரங்கள் தெரியுமா?

அப்பேர்ப்பட்டவர்கள் விஷயமாக உடனடியாக தண்டனையைக் குறைப்பதற்கு அரசுக்கு ஏதாவது நோக்கம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது தண்டனையைக் குறைப்பதுபற்றிய கேள்விதான். 10 ஆண்டுகளுக்கு மேலாக தண்டனை அனுபவிப்பவர்களை நாம் விடுதலை செய்யலாம் என்ற திட்டம் இருக்கிறது. அந்த ஸ்கீமின் அடிப்படையில் அவர்கள் வருவார்களேயானால் அதைக் கவனிக்கிறோம். 15 ஆண்டுகளுக்கு மேல் யாரும் இருக்கக்கூடாது, அப்படியிருந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். 9 ஆண்டுகளுக்கு மேல், அதாவது 2/3 தண்டனை அனுபவித்துவிட்டால் அவர்களுடைய கோரிக்கை அரசின் அளவிலே பரிசிலனை செய்யப்பட்டு, விடுதலை செய்ய வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பாளையங்கோட்டை ஜெயிலிலே பல ஆயுள் தண்டனைக் கைதிகள் இருக்கிறார்கள். அந்த போர்டு அவர்களைப்பற்றி பரிந்துரைகள் செய்திருந்தாலும், அவர்களில் பலருக்கு இந்தச் சலுகைகள் கிடைக்கவில்லை என்று புகார்கள் கூறப்படுகின்றன. அம்மாதிரி இருக்கிற பல புகார்களின் அடிப்படையில் வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கீழ் அளவில், போர்டு அளவில் சிபார்சு செய்யப்படுவதை பெரும்பாலும் அரசு நிராகரிப்பதில்லை. 'மர்டர் ஃபார் கயின்ஸ்' என்ற அப்படிப்பட்ட கேஸ்களில்தான் நாங்கள் தலையிடுகிறோம், கொடுக்கக் கூடாது என்று சொல்கிறோம். அப்படி அல்லாத வழக்குகள் இருக்குமானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அது பரிசீலிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : ஆயுள் தண்டனையை அறவே அகற்றி, ஜன்ம தண்டனையாக மாற்றி அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் தூக்கு தண்டனையைக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுகின்ற உரிமை அரசுக்கு உண்டு. அவர்களுடைய கோரிக்கையை அரசாங்கம் பரிசீலித்து முடிவு எடுக்கிறது.